RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s222721

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் இலக்கியப் பாதையில் சுவடுகளாகியப் பெண்ணியச் சிந்தனைகள்

**ச. யோகேஸ்வரி** [அ, *]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Feminist thoughts on Rajam Krishnan's literary trajectory

**S. Yogeswari** [a, *]

[a] PG Tamil & Research Department, Chellammal Womens College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: yogeswari1810@gmail.com

Received: 08-09-2022
Revised: 12-11-2022
Accepted: 17-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Man and woman are two equal beings in God's creation. Both beings make up human society. One of the highest qualities of humanity is to respect man as a human being. But male society does not even regard woman as an equal being. The struggles faced by women in life, social problems and social denial are the reasons for the emergence of feminist thoughts. Women face difficulties at various levels in their lives. Lack of education, disenfranchisement, marital difficulties, dowry problems, chastity and widowhood are some of the problems faced by women. It is found in women's lives. Removing these shortcomings will lead to social change. This article examines these issues through feminist criticism.

**Keywords:** Rajam Krishnan, Social Problems, Feminist thoughts, Women

## முன்னுரை

சங்க காலம் தொட்டு தற்காலம் வரையில் இலக்கியம் பல பாடுபொருள்களைக் கண்டிருந்தாலும் "பெண்ணியம்" என்பது மாறா கருப்பொருளாகவே இருந்து வருகின்றது. அதுவும் ஆண் படைப்பாளர்கள் வெளிக் கொணர்ந்த பெண்ணியச் சிந்தனைகளைக் காட்டிலும் பெண் படைப்பாளர்கள் தன் இனத்திற்காக அறைக்கூவிய சிந்தனைகள் காலந்தோறும். பேசப்படும் தன்மையைச் சற்று அதிகமாகவே பெற்றிருக்கின்றன என்றால் மிகையாகாது. அவ்வாறு பெண்ணியம் பேசிய பெண் படைப்பாளர்களுள் கால வெள்ளத்தால் தகர்க்க முடியாத கருத்துக்களைப் பதிவு செய்தவர் இராஜம் கிருஷ்ணன். அன்னாரின் இலக்கியப் பாதையில் நீங்கா சுவடுகளாக இடம்பிடித்த பெண்ணியச் சிந்தனைகளை வெளிக் கொணரும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரையானது அமைய இருக்கின்றது.

## இராஜம் கிருஷ்ணன் எழுத்துலகம்

பெண்கள் மிகக்குறைவாகவே எழுதிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் தமிழ்ப்புனைவெழுத்தில் கால் பதித்து வழக்கமான வணிகப் போக்குக்கு மாறான தீவிரம் கொண்ட சமூக விமர்சனங்களாகத் தன் நாவல்களை உருவாக்கியவர் இராஜம் கிருஷ்ணன். பெண் எழுத்தாளர்களில் அவரைப் போல அகலவும் ஆழவும் எழுதியிருப்பவர்கள் வேறு எங்கும் இல்லை.

பொறியாளராகப் பணி புரிந்த தன் கணவரின் அலுவல் காரணமாக இந்தியாவின் பல பகுதிகளிலும் வாழ நேரிட்டதால் ஆங்காங்கே நிலவும் பண்பாடுகளையும், அரசியல், சமூகச் சிக்கல்களையும் ஆழமாக உள்வாங்கிக் கொண்டு அவற்றைத் தன் படைப்புகளில் எதிரொலிக்க முயன்றதால் தொடர்ந்து வெவ்வேறு களப்பின்னணி கொண்ட நாவல்கள் இவரால் உருவாக்கப்பட்டது. ஒரு நாவலுக்கான பொருளை முன்பே திட்டமிட்டு, சம்பந்தப்பட்ட இடங்களில் பிரயாணம் செய்து, மக்களின் வாழ்வைக் கண்டறிய அங்கேயே தங்கி உய்த்துணர்ந்த பின்னரே நாவலை எழுதுவார். இதுவே இவரது தனிச் சிறப்பாகும். பெண்ணினம் சார்ந்த பிரச்சினைகளில் ஆக்க பூர்வமான தீர்வை நோக்கிய ஈடுபாடு காட்டி வந்த இராஜம் கிருஷ்ணன், பெண்விடுதலை இயக்கங்கள் பலவற்றிலும் நேரடியாகவே பங்கேற்றிருக்கிறார், போரடியும் இருக்கிறார்.

## ஊதிய முரண்பாடு

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே

பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி” (Bharathiar, 2010)

என பாட்டுப் புலவன் பாரதி பாடி பல்லாண்டுகள் ஆகிவிட்டன. தற்காலத்தில் மண்ணுலகு முதல் விண்ணுலகு வரையிலான வேலைகளை ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பார்க்கத் துவங்கிவிட்டனர் என்பது பாராட்டுக்கு உரிய செய்தியாக இருந்தாலும், மேல் மட்ட தொழில்கள் அன்றி அடிமட்டத் தொழில்களான விவசாயம், கட்டிடவேலை, உப்பளத் தொழில் போன்றவற்றில் வேலை செய்யும் பெண்கள் ஆண்களுக்கு நிகரான வேலையைச் செய்தாலும் ஊதியம் என்னவோ ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்குக் குறைவாகவே வழங்கப்படும் அவலத்தைத் தற்காலம், வரையும் காண முடிகின்றது. இதனை இராஜம் கிருஷ்ணன் அவர்கள் தாங்கள் இயற்றிய “கரிப்பு மணிகள்” என்னும் உப்பளத் தொழிலாளர் பற்றிய நாவலில் இடம் பெற்றுள்ளன.

“பெண்களுக்கு நான்கு ரூபாய் கூலி கொடுப்பான். அவர்களுடைய நிர்ணயக்கூலி நாலு ரூபாயும் நாற்பது பைசாவுமாகும். ஆண்களுக்கு நிர்ணயக்கூலி. ஆறுரூவாயும் சொச்சமுமாகும். ஆனால் செய்நேர்த்திக் காலத்தில் முழுக்கூலியைக் கண்களால் பார்க்க இயலாது. நான்கு ரூபாய் கொடுப்பான் முன்பெல்லாம். செய்நேர்த்திப் பணிக்கு ஆண்களை மட்டுமே எடுப்பார்கள். பெண்கள் வரப்பில் குவிந்த உப்பைத் தட்டுமேட்டில் கொண்டு சேர்க்கும் பணியைத் தான் பெரும்பாலும் செய்வார்கள். இந்நாட்களிலோ, ஆடவருக்கு அதிகக்கூலி என்பதால், பெண்களையும், இரண்டு ருபாய்க் கூலிக்கு வரும் சிறுவர் சிறுமிகளையும் பாத்திமிதிக்கச் செய்கிறார்கள்" (Rajam Krishnan, 2005).

என்ற பதிவிலிருந்து ஆண்களுக்கு நிகராக பெண்களிடமிருந்து வேலையைப் பெற்றுக் கொள்ளும் சமுதாயம் ஊதியத்தினை ஆண்களை விட பெண்களுக்குக் குறைவாகவே வழங்குகின்றது என்பதனைக் காட்டுகின்றது. வேளாண்மைத் தொழிலிலேயும் இந்நிலையே தொடர்கின்றது என்பதனை,

“உழவு செய்யும் ஆண், ஒரு நாளைக்கு ஆறு மணி உழவோட்டி, ரூபாய் எண்பதிலிருந்து நூறு வரையிலும் கூலி பெறுகிறான். ஆனால் பெண்ணோ, அவள் வேலைக்கு ஊதியமாக, பதினைந்திலிருந்து இருபது வரையிலும் தான் பெறுகிறாள்” என்ற வரிகளும் மெய்ப்பிக்கின்றன (Rajam Krishnan, 2007).

## குடும்பத்தில் பெண்களின் நிலை

ஒரு சமூகம் சிறப்படைய வேண்டுமானால் அதன் அங்கமாகத் திகழக் கூடிய குடும்பம் சரியாக இயங்க வேண்டும். குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள் என்ற சிறு அமைப்பையும். பெற்றோர்கள், கணவன், மனைவி, குழந்தைகள், உடன்பிறப்புகள் என்ற பெரிய அமைப்பையும். உடையதாகும், ஆதிகாலம் தொட்டு இன்றளவும் குடும்பம் என்றவுடன் அதன் பிராதான வேலைகள்

அனைத்தும் பெண்களைச் சார்ந்ததாகவே உள்ளது. பெண்கள் குடும்பத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை அம்மா, மனைவி, மகள், அக்கா, தங்கை, மாமியார், மருமகள், அண்ணி, நாத்தனார் என்ற கதாபாத்திரங்களின் வழி இராஜம் கிருஷ்ணன் தன் படைப்புகளில் பதிவுச் செய்துள்ளார். இராஜம் கிருஷ்ணனின் சூழலில் மிதக்கும் தீபங்கள் என்ற புதினத்தில் வரும் கிரிஜா, எம்.ஏ.பிஎட் படித்தவள். எட்டு ஆண்டுகள் ஆசிரியையாகப் பணிப்புரிந்தவள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு அவள் நிலைமை வேறு. வேலைப்பளு ஒருபக்கம் இருந்தாலும், கணவனுக்கும் மாமியாருக்கும் பயந்து ஆசாரம் எனும் பெயரில் முடங்கிவிடுகிறாள். இதைக் கண்ட உறவுப் பெண்ணான ரத்னா மனவருத்தத்துடன்

“தலையிட்டுத்தான் ஆகணும் கிரி ஆண்டி. நீங்க தனி மனுஷி இல்லை. ஒரு மொத்த சமுதாயத்தின் அங்கம். அறிவுப் படிப்புப் படிச்சு, கற்பிக்கத் தெரிஞ்சவங்க. உங்க அறிவு, திறமை, எல்லாம் இப்படி முட்டாள்தன மடிக்கூட்டில் பலியாகணுமா? மனுசருக்கும் மனுஷர் வேற்றுமை காட்டும் இது நிச்சயமா தருமமும் இல்லை. மண்ணும் இல்லை. தன்னையே எப்போதும் உயர்த்திப் பிடிச்சுகிட்டு மத்தவங்களைக் காலில் தேய்க்கும் கருவம் இது. ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணே விரோதியாகும் முட்டாள்தனம் என்கிறாள் (Rajam Krishnan, 2004).

கிரிஜாவின் வீட்டில் அவளுக்கே தெரியாமல் அலமாரியில் இருக்கும் பெட்டியைப் பார்க்கிறாள். புதிதாக இருப்பதைக் கண்டு, ஏது இந்தப் பெட்டி, இப்பெட்டியை யார் வைத்தது? என்ற கேள்விகளை, உணவு உண்டு கொண்டிருக்கும் கணவனிடம் கேட்க, அவன் சோற்றுத் தட்டைத் தூக்கி எறிகிறான். தண்ணீர் குப்பியை வீச, அது உடைந்து சிதறுகிறது தன் மனதில்,

“பதினேழு வருஷம் அடிமைச் சேவகம் செய்து, குடிந்தைகளைப் பெற்று வளர்த்த… இவளுக்கு ஒரு பேச்சு, ஒரு குரல் எழுப்ப உரிமை இல்லையா? அப்படியும் உரத்த குரல் கூட இல்லை. அந்த ஒரு பிசிறைக் கூட பொறுக்க முடியாத ஒரு கூடு இது… ரத்னா கூறினாற் போன்று, இது எவ்வளவு மோசமான கடுமையான, வெளிக்குத் தெரியாத அடக்குமுறை? வசதியான வீடு, நவீனமான வாழ்க்கை வசதிகள் என்ற ஆடம்பரங்கள் ஒரு பெண்ணுக்குத் தன் உரிமைக் குரலின் இலேசான ஒலியைக் கூட எழுப்பவிடாத அழுத்தங்கள் வேறென்ன? என்று வருத்தமுடன் எண்ணுகிறாள் (Rajam Krishnan, 2002).

ஒரு பெண் திருமணம் ஆன பிறகு தனக்கு விருப்பம் இருந்தாலும் சரி, விருப்பம் இல்லாவிட்டாலும் சரி வீட்டில் உள்ள உறவுகளுக்காகவும், தான் வாழும் சமுதாயத்திற்காகவும் பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டிய சுழல் தான் இருக்கின்றது என்பதனை, “மாறிமாறிப்பின்னும்" என்ற புதினத்தின் ரேவு எனும் கராபாத்திரத்தின் மூலம் விளக்கியுள்ளார் இராஜம் கிருஷ்ணன்.

“பதிமூன்று வயசில் இவளைக் கல்யாணம் என்று கயிற்றைக் கட்டி, மாமியாருக்கும், பாட்டிக்கும் சேவை செய்ய, மலஜலம் எடுக்க, புருஷனுக்கு ஈடு கொடுக்க என்று பூட்டி வைத்தார்களே. அப்போது வந்ததா? நடுத்தெருவில் வந்து விழுந்திருக்க வேண்டிய பூவை, அலையவிடாமல் நிழல் தந்து, அடுத்து வேளைச் சோற்றுக்கு அலையவிடாமல் பாதுகாத்தார்களே, அதனால் வந்ததா? இவளுக்கு ஒரு குடும்ப அந்தஸ்து. இன்னார் வீட்டு மாட்டுப்பெண் என்று, தாலியும் குங்குமுமாக, குருமடத்தில், சாதிக்குரிய சேலைக்கட்டுடன் 'உயர்சமூகம் அங்கீகரிக்கக் கூடியதே, அப்போது வந்ததா? அவனும் பஞ்சகச்சம் உடுத்தி, வேசம் பூண்டு, உத்தம புருசனாக, இவளுக்குப் புரியாத மந்திரங்களைச் சொல்லி இவளுடன் சுவாமிகளை விழுந்து பணியும் போது, இவள் இவன் சகதர்மினியாக அந்த வீட்டின் 'தலைவி' என்ற பொறுப்பில் இன்னமும் தன்னைப் பொறுப்புள்ளவளாக உயர்த்திக் கொண்டாளே! இரண்டு பிள்ளைகளைப் பெற்ற தாய் என்று குருட்டு வட்டத்தில் செக்கு மாடாகச் சுழன்றிருக்கிறாள்?” என்று குறிப்பிடுகிறார் (Rajam Krishnan, 2002).

## வறுமை நிலை

குடும்ப வாழ்க்கையில் பலப் போராட்டங்களைச் சந்தித்து வரும் பெண்கள் வறுமைநிலை வந்தாலும் செம்மையாக வாழ வேண்டும் என்றே நினைக்கின்றனர். கூடுமானவரைத் தன்னுயை வறுமைநிலை பிறருக்குத் தெரிந்துவிட கூடாது என்பதில் கவனமாகவும். இருக்கின்றனர் என்பதனையும், தவிர்க்க முடியாத சூழல் உருவாகும். போது தான் தன் வறுமை நிலையை

வெளிப்படுத்துகின்றனர் என்பதனையும் இராஜம் கிருஷ்ணன் தன்னுடையப் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

“பனை ஓலை கொண்டு வேயப் பெற்ற அந்த கொட்டகையில் உள்ளே சந்து சந்தாக வெய்யில் விழுந்து அவர்கள் உணவு கொள்வதைப் பார்க்கிறது. மேல வெயில் தள்ளி ஒக்காரும் என்று மருதம்மாள் அவனை நகரச் செய்கிறாள் (Rajam Krishnan, 2005) என கரிப்பு மணிகள் நாவலில் இடம்பெற்றுள்ள காட்சியும்,

“ரெண்டு பேரும் ஊரைவிட்டு ஓடி வந்தோம். இங்க பட்டணத்தில் சமுத்திரத்தில விழுந்து சாவலான்னு கூடத் தோணும்படி, இருக்க இடமோ, காசு பணமோ வேலையோ இல்லாமக், கஷ்டப்பட்டோம், அவுரும் என்னென்ன கஷ்டமோ பட்டு வியாபாரம் செஞ்சாரு இதில பிள்ளை…

"இப்ப ரெண்டு பிள்ள தான இருக்கு ?”

“பத்தாதாம்மா? அதுக்கு இஸ்கூலுக்குப் போட்டுட்டுப். போக ஒரு வெள்ள சட்ட இல்ல. உங்கிட்ட வெக்கத்தவுட்டுச் சொல்றேன். நிதமும் ராவுல துவைச்சு உலத்திப் போடுறேன். பாவம் புள்ளங்க….” என வெளிச்சம் சிறுகதையில் இடம் பெற்றுள்ள காட்சியும் உணர்த்துகின்றன (Rajam Krishnan, 1995).

## பெண் மீதான ஏளனப் பார்வை

தாய் வழி சமூகமான நம் பண்பாடானது மாற்றம் அடைந்தப் பிறகு பெண் என்றாலே ஓர் ஏளனப் பார்வையாக மாறிவிட்டது என்பதையும் இராஜம் கிருஷ்ணன் தன்னுடையப் படைப்புகளில் சுட்டிக்காட்ட மறந்ததுமில்லை. பெண்ணானவள் தனக்குக் கட்டுப்பட்டவள் என்ற எண்ணம் ஆண்களிடம் உள்ளது. அதனால் பெண்களைப் பல கட்டுப்பாடுகளுக்கும், துன்பத்திற்கும் உள்ளாக்குகின்றான். பொருளாதாரத்தில் பின்தங்கிய, சொத்துரிமை இல்லாத அடிமட்டத்துப் பெண்களை ஆண்கள் எளிதில் ஏமாற்றி விடுகின்றனர். பெரும்பாலும் பெண்கள் பொருளாதாரப் பின்னடைவால் ஆணைச் சார்ந்தே வாழக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகிறாள். உயர் வர்க்கத்திலோ, உயர் பதிவியிலோ இருப்பவர்கள் தன்னுடைய உயர்நிலையை யாரும் கேட்க நாதியற்று இருக்கும் மக்களிடம் காட்டுகின்றனர். இதனை இராஜம் திருஷ்ணன் “அலைவாய்க்கறையில்” என்ற புதினத்தில் ஆதரவற்ற பெண்ணான ஏலியைக் காவல்துறையினர் அடித்ததோடு, அவளைப் பலமுறை சித்ரவதைச் செய்து பின்னர் அவள் இறந்து போகும் நிலையினை,

“ஒரு பெண் வாழ்க்கையின் எல்லா முனைகளிலும் மோதிக் கொண்ட பின்னரும் உயிர்வாழ எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தாள்! அதை நினைத்தாள் மட்டும் அவனால் தாள இயலுவதில்லை. பெண் பின்ளைகளைவிடப் பயங்காளிகளாக ஓடிப் போனார்கள், தன் உயிரையே அவள் அவர்களுக்காகக் கொடுத்திருக்கிறார்கள். அப்பனை மீட்டு வந்ததறிந்து அவளைப் போலீசான் என்ன பாடுபடுத்தியிருக்கிறான்! எத்தனை தடியன்கள் அவளை உருக்குலைத்துக் கொன்றார்களோ” என்று குறிப்பிடுகின்றார் (Rajam Krishnan, 2000).

ஆண்கள் பெண்களின் வாழ்க்கையில் எந்தெந்த நிலைகளில் உடன் இருக்க வேண்டுமோ அப்போதெல்லாம் தொலைவில் நின்று வேடிக்கைத் தான் பார்க்கின்றனர் என்பதனையும் இராஜம் கிருஷ்ணன் ரோஜா இதழ்கள் என்ற நாவலில் பதிவு செய்துள்ளார். இதனை,

“பெண்ணுக்குப் பொறுப்பு அதிகம்; கட்டுப்பாடுகளும் அதிகம் என்றால் ஆணுக்கு மட்டும் பொறுப்பு கொஞ்சமா? தன்னுள் எழும் விலங்கியல் உணர்வுகளுக்காகத்தான் ஒரு ஆண், பெண்ணை மதிக்கிறான். அந்த உணர்வு தனக்கு ஒரு பொறுப்புக் கடனைச் சுமத்தும் விகையில் விளைவு தரும் போது, எத்தகைய அறிவாளியும் முதிர்ந்த பண்பாடு உடையவனும் பொறுப்பை. ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். இது இன்றைய நிகழ்ச்சி மட்டுமில்லை பண்டைய காலப் புராண முனிவர்களிலிருந்து தொடர்ந்து வரும் வரலாறு தான் இல்லையா? என்ற வரிகள் விளக்கி நிற்கின்றன (Rajam Krishnan, 2001).

“கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" (Bharathiar, 2010)

என்றார் பாரதி. கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானது எனப் போற்றக்கூடிய வேண்டியது. ஆனால் இச்சமூகம் பெண்கள் தவறு செய்தாலும் சரி ஆண்கள் தவறு செய்தாலும் சரி பெண்ணின் மீதே பழி போடும் வழக்கத்தினை வைத்துள்ளனர். 'மாறி மாறிப் பின்னும்' எனும் புதினத்தில் மனநிம்மதிக்காக தன் தம்பி வேம்புவின் வீட்டிற்கு சென்று வந்து தன் தாய் ரேவுவின் மனம் புண்படும் படி அவளின் மகன் ராம்ஜி சந்தேகம் கொள்கின்றான். அது அவளுக்கு சவுக்கடிப் போல இருந்தது என்பதனை,

"அப்படி இந்த பின்னை இன்று விட்டுப் போகும்படி இவள் மன்னிக்க முடியாத எந்தத் தப்பைச் செய்துவிட்டாள்? நிமிர்ந்து பார்த்து, ஒரு வார்த்தை பரிவுடன், பாசத்துடன் கேட்க முடியாதபடி, இவள் என்ன தவறு செய்தாள்? பெற்ற தாய்! இவன் டாக்டருக்குப் படிக்கப்போகிறானாம் என்று ரேவு நினைக்கும் நினைவலைகள் உணர்த்துகின்றன (Rajam Krishnan, 2002).

## பெண்கல்வியின் முக்கியத்துவம்

ஒரு காலத்தில் கல்வி என்பது ஆண்களுக்கு மட்டுமே உரிமையானதாக இருந்தது. பின்னர் பல போராட்டங்களுக்கும் பின்னர் தான் பெண்களுக்கும் கல்வியானது கிட்டியது. அத்தகைய கல்வியே பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தினையும் வழங்கியது. கல்வி மட்டுமே பெண்ணை ஆணுக்கு நிகரென வாழ வைக்கும் என்பதனையும் இராஜம் கிருஷ்ணன் தன் படைப்புகளில் பதிவு செய்துள்ளார். இராஜம்கிருஷ்ணனின் 'மாறிமாறிப்பின்னும்' என்ற புதினத்தில் படிப்பறிவு உடைய சுதா தன் கணவனிடத்திலும் சமுதாயத்திலும் மதிப்புடன் இருப்பதைக் கண்டு படிப்பறிவு இல்லாத ரேவு தன் கணவன் தன்னை அடிமையாக நடத்துவதைக் கண்டு விருந்துகின்றாள். இதனை,

"இந்தக் கவுரவ நிழலைப் பற்றி எப்படி இவனுக்கு புரிய வைக்க? இல்லைடா வேம்பு நான் எப்படியானும் படிச்சி ஒரு எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சிருக்கணும். ஏதேனும் வேலைக்குப் போய், என்னால் என்னைக் காப்பாற்றிக்க முடியும்னு ஆயிருக்கனும். கல்யாணம்னு என்னை இப்படி அடிமைச் சாசனம் பண்ணிண்டாலும், அப்ப புருஷன் மதிப்பான். இப்ப சுதாவைப் பாரு, எவ்வளவு ஃபிரியா இருக்கா? அவ புருஷன் அவளை எப்படி மதிக்கிறார், தாங்கறார்? அவர் பழகற விதமே மரியாதையாக இருக்கு. அவள் பகல் வேலை. ராவேலைன்னு போறா. அவரும் பாங்க் ஆடிட்டிங்தானே, பாதிநாள் போவார். ரெண்டு பேருக்கும் கர்வம் கிடையாது. அவாளும் எங்கோ வீடு கட்டிண்டு இருக்கா காலி பண்ணிட்ட, வேற யார் வருவாளோ?" என்று விளக்கியுள்ளார் இராஜம் கிருஷ்ணன் (Rajam Krishnan, 2002).

புத்தக அறிவு மட்டுமின்றி பெண்கள் தொழில் சார்ந்த கல்வியையும் கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதப்பட்ட நாவல் தான் "கோடுகளும் கோலங்களும்" செவ்வந்தி விவசாயம் கற்று பயிர் செய்ய வேண்டும் என எடுக்கும் எல்லா முயற்சிக்கும். அவளின் கணவன் முட்டுக் கட்டையாக இருக்கின்றான். அதையும் மீறி அமள் விவசாயம் செய்கின்றாள்.

"என்னமோ ரெண்டு பொம்பளைங்க ஜீப்புல வந்து எறங்கி பயிரு வைக்கற பாடம் நடத்தினாங்களாம். இவங்களுக்குத் தலகால் புரியல? நாலு புஸ்தகத்த, அதுவும் இங்கிலீஷ் புஸ்தகத்தப் படிச்சிட்டுப் பயிர் வைக்கிறதாம். உர மருந்து பூச்சி மருந்து அது இதுண்ணு கெடங்கில் வெயில்லாம கிடந்திச்சின்னா, தலையில் கட்ட இப்பிடி ஒரு சூட்சுமம் போல இவளுவ புத்தகத்தில் எழுதிட்டு வந்து, அது போல பயிரு வைக்கிறதாம். தொரசானி முருங்கக்கா சாப்புட்ட கத தா. அப்படியே முழுங்கணுமிண்ணு தொண்டக் குழில சக்கய எறக்கிட்டுத் தவிச்சாளாம்" (Rajam Krishnan, 2007)

## முடிவுரை

பெண்ணியத்தின் பிரச்சனைகளைப் படைப்பாளி ஒவ்வொருவரும் தங்களின் நிலையிலிருந்து பல்வேறு கோணங்களில் உற்று நோக்கியும் படைத்தும். வந்திருக்கின்றன. இராஜம் திருஷ்ணனின் படைப்புகள் சமுதாயத்தில் வேரோடிக் கிடக்கும் அடிமைத்தனத்தை மானுடத்திலிருந்து இனம் பிரித்துக்

காட்டும் வன்மையைப் பெற்றிருக்கின்றன. இவரின் புதினங்களின் கருத்தோட்டமா விளங்கும் பெண்ணியத்தின் பிரச்னைகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

## References

Bharathiar, (2010) Bharathiar Kavithaigal, Poonkodi Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (1995) Velicham, Thagam Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (2000) Alaivaaik Karaiyil, Thagam Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (2001) Roja Ethalkal, Thagam Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (2002) Mari Marip Pinnum, Thagam Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (2004) Sulalil Mithakum Deepankal, Thagam Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (2005) Karipu Manikal, Nam Tamilar Pathipagam, Chennai, India

Rajam Krishnan, (2007) Kodukalum Kolangalum, Thagam Pathipagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License